උක් පර්යේෂණ ආයතනය

கரும்பு ஆராய்ச்சி நிலையம்

# Sugarcane Research Institute

# 2011

වාර්ෂික වාර්තාව

ஆண்டறிக்கை

**Annual Report**



# கரும்பு ஆராய்ச்சி நிலையம்

**தலைமை ஆராய்ச்சி நிலையம் - உடவளவை**

தொலைபேசி : +944 722 33 281, 944 72 233 285

தொலைநகல் : +944 72 233 233

மின்னஞ்சல் : sri@sugerres.lk

இணையத்தளம் : www.sugerres.lk

**உப காரியாலயம்**

தெலவல வீதி, இரத்மலானை

தொலைபேசி : +94112605759

தொலைநகல் : +94112605236

**தலைவர்**

தொலைபேசி : +94112607161

தொலைநகல் : +94112605145

**பணிப்பாளர் மற்றும் தலைமை நிறைவேற்றதிகாரி**

தொலைபேசி : + 944 72 233 282

கௌரவ அமைச்சர்
சிறு ஏற்றுமதிப் பொருட்கள் மேம்பாட்டு அமைச்சு
கமற்றொழில் நிலையம்
5/80, ரஜமல்வத்த
பத்தரமுல்ல

கௌரவ அமைச்சர் அவர்களே,

**2011.01.01 ஆம் திகதி முதல் 2011.12.31 ஆம் திகதி வரையான காலத்திற்காக கரும்பு ஆராய்வு நிலையத்தின் வருடாந்த அறிக்கை**

கரும்பு ஆராய்வு நிலைய ஆளுகை குழு சார்பில் 2011.01.01 ஆம் திகதியில் இருந்து 2011.12.31 ஆம் திகதி வரையான காலத்திற்காக கரும்பு ஆராய்ச்சி நிலையத்தின் வருடாந்த அறிக்கையினை இத்தோடு மிக மகிழ்ச்சியுடன் அர்ப்பணிக்கின்றேன்.

இப்படிக்கு, நம்பிக்கையுடனான
கரும்பு ஆராய்ச்சி நிலையம்

**எஸ்.கே. சிரில்**
தலைவர்
கரும்பு ஆராய்வு நிலைய ஆளுகை சபை

## உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| உள்ளடக்கம் | iii |
| தொலைநோக்கு | 1 |
| பணிப்பிரகடனம் | 1 |
| ஆளுகை சபை | 2 |
| தலைவரின் செயலாற்றுகை மீளாய்வுக் கூற்று | 3 |
| பணிப்பாளரின் செயலாற்றுகை மீளாய்வுக் கூற்று | 4 |
| துறைகள் சாரந்த அறிக்கைகள் | 6 |
| பயிர் முன்னேற்றற் பிரிவு | 6 |
| பயிர் மற்றும் வளங்கள் முகாமைத்துவப் பிரிவு | 8 |
| பயிர் போசாக்குப் பிரிவு | 11 |
| பயிர் பாதுகாப்புப் பிரிவு | 12 |
| இயந்திர தொழில்நுட்பப் பிரிவு | 13 |
| சரியாக்கல் தொழில்நுட்பப் பிரிவு | 14 |
| பொருளாதாரம், உயிரினவாழ் மற்றும் தகவல் தொழில்நுட்பப் பிரிவு | 14 |
| தொழில்நுட்ப பரிமாற்றல் மற்றும் அபிவிருத்திப் பிரிவு | 15 |
| நிர்வாக மற்றும் நிதிப் பிரிவு | 19 |
| வெளியீடுகள் | 23 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு அறிக்கை | 25 |
| கணக்காய்வு செய்யப்பட்ட நிதிசார் அறிக்கைகள் | 26 |
| நிதி நிலைப் பற்றிய அறிக்கை | 26 |
| நிதிசார் வினைத்திறன் கூற்று | 27 |
| காசு பாய்ச்சல் கூற்று | 28 |
| நிதி நிலை கூற்றுக்கான குறிப்புகள் | 29 |
| நிதிசார் வினைத்திறன் கூற்றுக்கான குறிப்புகள் | 33 |
| அட்டவணை 1 – உடைமை, இயந்திரத் தொகுதி மற்றும் உபகரணங்கள் | 35 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 36 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் | 49 |
| 2006 முதல் 2010 வரையான அதி விசேட நிதிசார் தகவல்கள் | 56 |

# தூரநோக்கு

கரும்புத் தொழில்நுட்பத்தில் சிறந்த நிறுவனமாக மற்றும் இலங்கை கரும்புத் தொழிலை அபிவிருத்தி செய்வதில் முன்னிலையாளராக செயற்படுதல்.

# பணிப்பிரகடனம்

நாட்டுக்கேற்றப்படியான நவீன தொழில்நுட்பங்களை முன்னேற்றல் மற்றும் அதனை பெற்றுக் கொடுப்பதன் மூலம் இலங்கை கரும்புத் தொழிலின் போட்டித் தன்மையினை உயர்த்தல் மற்றும் அதனை உறுதியான முறையில் பரவலாக்கல் மற்றும் அபிவிருத்திச் செய்வதில் பங்கேற்றல்.

## ஆளுகை சபை

| | |
|---|---|
| திரு. எஸ். கே.சிரில் | தலைவர் நியமிக்கப்பட்ட உறுப்பினர் |
| திரு. ரி. எல். ரி. ஏ. சுனில் டி சில்வா | உறுப்பினர் நியமிக்கப்பட்ட உறுப்பினர் (2011.ஜுன் மாதம் 14 ஆம் திகதி முதல்) |
| திரு. பீ.ஆர்.எல். யூ.எல்.பீ. விஜேவர்ணசூரிய | உறுப்பினர் நியமிக்கப்பட்ட உறுப்பினர் (2011.ஜுன் மாதம் 04 ஆம் திகதி முதல்) |
| திரு. ஹசித குணவர்தன | உறுப்பினர் நியமிக்கப்பட்ட உறுப்பினர் (2011 மே மாதம் 06 ஆம் திகதி முதல்) |
| செல்வி சாமிகா மதுவந்தி | உறுப்பினர் நிதி அமைச்சினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் நியமிக்கப்பட்ட உறுப்பினர் (2011. ஜனவரி மாதம் 31 ஆம் திகதியில் இருந்து) |
| திருமதி ஆர். எம். சீ. எம். ஹேரத் | உறுப்பினர் சிறு ஏற்றுமதி பயிர்கள் அபிவிருத்தி அமைச்சினைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் நியமிக்கப்பட்ட உறுப்பினர் (2011. ஜனவரி மாதம் 25 ஆம் திகதி முதல்) |
| கலாநிதி. திரு. என். சீ. குமாரசிங்க | உறுப்பினர் பணிப்பாளர் (பதவி வழி உறுப்பினர்) |

# தலைவரின் மீளாய்வுக் கூற்று

2011 – 2015 கூட்டுத் திட்டத்தின் பிரகாரம் ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் மனிதவலு, உட்கட்டமைப்பு அபிவிருத்தி வசதிகள் அபிவிருத்தி செய்யும் செயற்பாடுகளை மேற்கொள்ளப்பட்டது.

கரும்பு ஆராய்ச்சி நிறுவன சட்டத்தை திருத்தப்பட்டு நிறுவனம் சார் அதிகாரங்களை ஆராய்ச்சிகளுக்கு மேலதிகமாக கரும்பு தொழிலின் அபிவிருத்தி மற்றும் விதிமுறைகள் தொடர்பான பணிகளை நிறைவேற்றிட இயலுமான வகையில் தேவையான ஆலோசனைகளை உட்படுத்திடப்பட்டது.

சீனி தொழிலில் சார் தேவைப்பாடுகளின் பிரகாரம் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சிகளை மிகவும் பலனுடையதாக நிறைவேற்றிடும் நோக்கத்துடன் நிறுவனங்களின் தொழில்நுட்ப பிரிவுகளை மீளமைக்கப்பட்டன. இதன் பிரகாரம், தொழில்நுட்ப பிரிவுகள், பயிர் முன்னேற்றப் பிரிவு, பயிர் மற்றும் வளங்கள் முகாமைத்துவப் பிரிவு, பயிர் போசாக்குப் பிரிவு, பயிர் பாதுகப்புப் பிரிவு, இயந்திரமயப்படுத்தல் தொழில்நுட்பப் பிரிவு, பொருத்தல் தொழில்நுட்பப் பிரிவு, பொருளாதார, உயிரியல் மற்றும் தகவல் தொழில்நுட்பப் பிரிவு மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றல் மற்றும் அபிவிருத்திப் பிரிவு என மீளமைக்கப்பட்டன. ஆராய்ச்சி பிரிவுகள் தொடர்பாக மிகவும் பலனான சேவையை அளிப்பதற்காக ஆராய்ச்சி பண்ணை, பயிர் மற்றும் வளங்கள் முகாமைத்துவ பிரிவின் கீழ் கொண்டுவரப்பட்டது.

இவ்வாறே, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சிகள் இலங்கையில் சீனித் தொழில் தொடர்பான தேவைப்பாடுகளின் பிரகாரம் மிக பலனுடையதாக நிறைவேற்றுவதற்காக கீழ் காணும் 7 பிரதான நிகழ்ச்சிகளின் கீழ் செயற்படுத்திடப்பட்டன.

- அ. பயிர் முன்னேற்றப் பிரிவு
- ஆ. பயிர் மற்றும் வளங்கள் முகாமைத்துவம்
- இ. பயிர் போசாக்கு
- ஈ. பயிர் பாதுகாப்பு
- உ. பண்ணை இயந்திரமயப்படுத்தல்
- ஊ. பொருத்தல் மற்றும் உற்பத்தி மேம்படுத்தல்
- எ. தொழில்நுட்ப பரிமாற்றல் மற்றும் அபிவிருத்தி

மனிதவலு பயிற்சி தேவைப்பாடுகளை இனங்காணப்பட்டப் போதிலும் விஞ்ஞான உத்தியோகத்தர்களுக்கு நீண்ட கால பயிற்சியில் ஈடுபடுத்துவதற்காக தகுந்த நிலையங்களை கண்டெடுப்பதற்கு இயலவில்லை. ஆயினும் சேவையணி தொடர்பில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு குறுங்கால பயிற்சி நிகழ்ச்சிகள் அனேகமானவற்றில் பங்கேற்கும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு முடிந்தது.

உள்கட்ட வசதிகளை அபிவிருத்தி செய்வதை வெற்றிகரமான முறையில் நிறைவேற்றிட முடியவில்லை. இதற்கான காரணம் யாதெனில் இது தொடர்பாக தேவையான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட தாமதமாகும். ஆயினும் என்சல்வத்தையில் அமைந்துள்ள இன பெருக்கல் நிலையம் மற்றும் விதந்துரைக்கப்பட்டுள்ள கரும்பு இனங்களை பெருக்கி விதை கரும்பு உற்பத்தி செய்வதற்காக ஆரம்ப விதை கரும்பு படுக்கையொன்றை உடவளவையில் ஸ்தாபிப்பதற்கு இயலுமாகியது.

இதற்கு மேலதிகமாக இலங்கையில் சீனி தொழில்நுட்பத்தை முன்னேற்றுவதில் பங்கேற்றிட பதுளை மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் ஒவ்வொரு நிகழ்ச்சிகளாக நடைமுறைப் படுத்தப்பட்டது. இவ் இறு நிகழ்ச்சிகளால் கிராமிய மட்டத்தின் கரும்பு தொடர்பான உற்பத்தித் தொழில்களை முன்னேற்றவது இதன் நோக்கமாகியது.

**எஸ். கே. சிரில்**
தலைவர்
கரும்பு ஆராய்ச்சி நிறுவனம்.

# பணிப்பாளரின் மீளாய்வுக் கூற்று

1981 இன் 75 ஆம் இலக்க ஆணைச்சட்டத்தின் கீழ் 1984 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட கரும்பு ஆராய்ச்சி நிலையம் சுமார் 27 ஆண்டு காலமாக ஆராய்ச்சி மற்றும் விஸ்தரிப்புப் பணிகளால் சீனி தொழிலை முன்னேற்றவதற்காக தேவையான அலுவல்களை மேற்கொண்டு வரப்பட்டது. சீனி தொழிலின் விருத்திக்காக மிக சிறந்த பங்களிப்பை வழங்கும் எண்ணத்துடன் ஆராய்ச்சி பிரிவுகளின் பிரகாரம் தொழில்நுட்ப பிரிவுகளை மீளமைத்து இணைக்கப்பட்டன.

எஸ். எல். 95 4033, எஸ். எல். 95 4430 மற்றும் எஸ். எல். 96 328 எனும் புதிய 03 கரும்பு இனங்களை வர்த்தக விவசாயத்திற்காக வெளிப்படுத்திட இயலமானமை இவ் ஆண்டில் பெற்ற குறிப்பிடத்தக்க வெற்றிகளாக கருதப்படும். செவனகல மற்றும் அம்பாறை மாவட்டத்தில் தமன பிரதேசத்தில் கள மாதிரிகளால் எஸ். எல். 83 06, எஸ். எல். ஐ. 121, எஸ். எல். 92 4918, எஸ். எல். 92 4993 மற்றும் எஸ். எல். 92 5588 எனும் கரும்பு வகைகளை பரவலாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

எஸ். எல். 88 116 மற்றும் எஸ். எல். 96 328 எனும் இனங்களின் ஆரம்ப விதைப் படுக்கைகளை ஸ்தாபிப்பதற்காக இவ் இனங்களிலிருந்து விதை கரும்புகளை செவனகல சீனி உற்பத்தி நிறுவனத்திடம் பெற்று கொடுக்கப்பட்டது. அத்தோடு எஸ். எல். 84 1673, எஸ். எல். 92 4918, எஸ். எல். 92 4997, எஸ். எல். 92 5581, எஸ். எல். 95 4033, எஸ். எல். 95 4430 மற்றும் எஸ். எல். 96 328 எனும் கரும்பு இனங்கள் தொடர்பான விபரங்களை கரும்பு விவசாயிகளிடம் பெற்று கொடுக்கப்பட்டது.

எஸ். எல். 88 116 மற்றும் எஸ். எல். 96 328 எனும் இனங்களின் ஆரம்ப விதைப் படுக்கைகளை ஸ்தாபிப்பதற்காக இவ் இனங்களில் இருந்து விதை கரும்பு செவனகல சீனி உற்பத்தி நிறுவனத்திடம் பெற்று கொடுக்கப்பட்டது. அத்தோடு எஸ். எல். 84 1673, எஸ். எல். 92 4918, எஸ். எல். 92 4997, எஸ். எல். 92 5581, எஸ். எல். 95 4033, எஸ். எல். 95 4430 மற்றும் எஸ். எல். 96 328 எனும் கரும்பு இனங்கள் தொடர்பான தகவல்களை கரும்பு விவசாயிகளிடம் பெற்று கொடுக்கப்பட்டது. கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்பட்டுள்ள எஸ். எல். 8306, எஸ். எல். 89 1673 மற்றும் எஸ். எல். 92 5581 எனும் கரும்பு இனங்கள் வியட்நாமில் ROC 23, VN 84 4137, மற்றும் QD 93 159 எனும் மூன்று (03) இனங்களுடன் பரிமாறிக்கொள்ளப்பட்டது.

மழைப் பொழிவு மற்றும் மேலதிக நீர் வழங்கல் நிலைகளின் கீழ் அதிகமான இடை விளைச்சல்களை பெற்று கொடுக்கக்கூடிய எஸ். எல். 90 6237 மற்றும் எஸ். எல். 93 945 எனும் இனங்கள் மற்றும் மேலதிக நீர் வழங்களின் கீழ் அதிகமான இடை விளைச்சலை பெற்றுகொடுக்கும் எஸ். எல். 92 4918 எனும் இனங்கள் தொடாபான தகவல்களை சீனி தொழிலிடம் பெற்று கொடுக்கப்பட்டது. செவனகல பிரதேசத்தில் 2000 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை கரும்பு விவசாயம் செய்வதற்கான செலவீனம் மற்றும் வருமானத்தை பகுப்பாய்வு செய்யப்பட்டது. பதுளை மற்றும் மொனறாக்கலை மாவட்டங்களில் கரும்பு கருப்பட்டி உற்பத்தியின் செலவீனம் மற்றும் வருமானம் தொடர்பான பகுப்பாய்வினை மேற்கொள்ளப்பட்டது. ஹிங்குராணை பிரதேசத்தில் கரும்பு விவசாய நிலங்கள் தொடர்பாக உரம் மாதிரிகளை பெற்றுகொடுக்கப்பட்டன.

இயந்திரமயப்படத்தல் தொழில்நுட்ப பிரிவால் 20 கொக்கி உழுவுகள் மற்றும் வரிப்பள்ளங்கள் அடிக்கும் 05 உபகரணங்களை உற்பத்தி செய்யப்பட்டதோடு இவற்றில் இருந்து 04 உபகரணங்களை பெல்வத்தை விவசாய நிறவனமொன்றிற்கு குறைந்த விலைக்கு பெற்று கொடுக்கப்பட்டது. கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்பட்ட மேற்படியான இரு உபகரணங்களை புத்தலை, சியபலண்டு மற்றும் ஹிங்குராணை பிரதேசங்களின் கள மாதிரிகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தவதன் மூலம் அவற்றின் பாவனையை மேம்படுத்தவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறே இரண்டு சக்கர உழவு இயந்திரத்தால் இயக்கக்கூடிய உரம் செலுத்தும் உபகரணம் மற்றும் இந்திய வடிவத்திலான கரும்பு தளிர்களை வெட்டும் உபகரணமொன்றை உற்பத்தி செய்வதும் இவ் ஆண்டில் குறிப்பிடத்தக்க புதிய கண்டுபிடிப்புகளாகும். இதை தவிர, வெள்ளரிக்காய், நிலைக்கடலை, கவ்பி, குமட்டிப்பழம் மற்றும் மிளகாய் என்பவற்றை இனைப் பயிர்களாக விவசாயம் செய்வதை மேம்படுத்தல், மண்ணின் செழிப்பு நிலையினை முகாமைத்துவப்படுத்தல் மற்றும் இடைவெளியுடன்

கரும்பு நடுதல் முறையினை பிரபல்யப்படுத்துவதற்காக விஸ்தரிப்பு நிகழ்ச்சிகளை செயற்முறைப்படுத்தப்பட்டது. செவனகல மற்றும் பெல்வத்தை பிரதேசங்களின் கம்பளிப் பேன் பரவிய விவசாய நிலங்களிடம் இரசாயனக்கூடங்களினுள் வளர்க்கப்பட்ட டை.ஃபா அபிடிவொரா மற்றும் மைகிரோமஸ் எனும் மாதிரிகளை விடுவிக்கப்பட்டதன் மூலம் கம்பளிப் பேனின் வளர்ச்சியை கட்டுப்படுத்தப்பட்டது.

ஆராய்ச்சி மற்றும் விஸ்தரிப்பு நிகழ்ச்சிகளுக்கு மேலதிகமாக இவ் ஆண்டினுள் நிறுவனம் பல நிகழ்ச்சிகளில் ஈடுபட்டுள்ளன. மூடப்பட்டுள்ள கந்தலை சீனி தொழிற்சாலை மற்றும் புதிய கரும்பு விவசாய கருத்திட்டங்களை ஆரம்பித்தல் பொருட்டு அரசு மற்றும் முதலீட்டாளர்களுக்கு தேவையான ஆலோசனைகள் மற்றும் தகவல்களை பெற்று கொடுக்கப்பட்டது. புதிய வர்த்தக மற்றும் வர்த்தக விவசாயத்திற்கு அண்டிய 24 கரும்பு இனங்களைக் கொண்ட விதைப் படுக்கையொன்றை கந்தளையில் ஆரம்பிக்கப்பட்டது. கல்ஓயா விவசாய நிறுவனத்திற்கு தேவையான ஒத்துழைப்பு மற்றும் பிபிலை சீனி கரத்திட்டங்கள் தொடர்பான கருத்துக்களை விவசாய அமைச்சின் ஊடாக அமைச்சரவையிடம் பெற்று கொடுக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 2013 ஆம் ஆண்டின் போது 50 கரும்பு விவசாய குடும்பங்களை உண்டு பண்ணும் எண்ணத்துடன் ஆரம்ப கட்டமாக விதைக் கரும்பு உற்பத்தி செய்தல் மற்றும் பிரதேச விவசாய, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தில் ஒரு விதைக் கரும்பு படுக்கை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்திலால் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு கரும்பு விவசாயம் செய்தல் மற்றும் கருப்பட்டி உற்பத்தி செய்தல் தொடர்பான பயிற்சியும் பெற்று கொடுக்கப்பட்டது.

கரும்பு கருப்பட்டி உற்பத்தியினை முன்னேற்றுவதும் 2011 ஆம் ஆண்டின் ஒரு முக்கிய துறையாக கருதப்பட்டது. கைத்தொழில்சார் அபிவிருத்தி சபையுடன் இணைந்து பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தல், பிரதேச வங்கள் மூலம் கரும்பு மில்களை நவீனமாயப் படுத்துவதற்கு உதவிகள் பெற்றுக் கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், சியபலாண்டு பிரதேசத்தில் கருப்பட்டி உற்பத்தியினை மேல் முன்னேற்றம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட அலுவல்களிடையில் முக்கியமானதாகும். சியபலாண்டில் சிவில் பாதுகாப்பு அணி மற்றும் வெலிகந்த கந்தகாடு புனர்வாழ்வு முகாம் உத்தியோகத்தர்களுக்கு கரும்பு விவசாயம் தொடர்பாக தேவைப்படும் ஒத்துழைப்பை பெற்று கொடுக்கப்பட்டது.

இவ் ஆண்டினுள் கரும்பு ஆராய்ச்சி நிறுவனம் பிரதேச நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி பராமரித்துக்கொள்ளபட்டது. நிறுவனத்தின் பணிப்பாளர் வியட்நாமில் தாவர ஆராய்ச்சி நிறுவனத்தால் வழங்கிய வரவேற்பின் பிரகாரம் அங்கு கரும்பு புல் குட்டையாகும் நோயை கட்டுப்படுத்தல் தொடர்பாக அறிவுரைகள் பெற்றுக்கொடுப்பதற்காக அன் நாட்டுக்கு சென்றுள்ளார். பாகிஸ்தான் கரும்பு பெருக்கல் நிலையத்திடம் இலங்கையல் மேற்கொள்ளப்பட்ட 100 இனக் களப்பினால் பெற்ற விதைகளை பெற்றுகொடுக்கப்பட்டது. 2011 இல் இந்தியா புது தில்லியில் நடைப்பெற்ற நான்காவது சர்வதேச சீனி சம்மேளனத்திற்காக நிறுவனத்தின் எஸ். கே. சிரில் (தலைவர்), கலாநிதி என். சீ. குமாரசிங்க (பணிப்பாளர்) மற்றும் கலாநிதி டபிள்யூ. ஆர். ஜீ. விதாரம ( பயிர்கள் மற்றும் வளங்கள் முகாமைத்துவ பிரிவின் பிரதான ஆராய்ச்சி உத்தியோகத்தர்) பங்கேற்றி ஏனைய நாடுகளிலிருந்து பங்கேற்றிய பங்கேற்பாளர்களிடையில் அறிவை பகிர்ந்துக்கொள்ளப்பட்டது.

2011 ஆம் ஆண்டின் போது நிறுவனத்தின் செஸ் வரிகளாக 144 மில்லியன் ரூபாக்கள் சேகரிக்கப்பட்டதோடு இது முன்னால் வருடத்திற்கு விட 0.8% அதிகமானதாகும். ஆயினும் மேலதிக நிதிகளாக நிலவிய 68 மில்லியன் ரூபாக்களை திறைசேரியிடம் பெற்றுக்கொடுக்கப்பட்டது. இவ் ஆண்டினுள் நிறுவனத்திற்கு புதிய உள்கட்ட வசதிகள் சேர வில்லை.

**கலாநிதி. என்.சீ.கே. குமாரசிங்க**
பணிப்பாளர்/தலைமை நிறைவேற்றதிகாரி
கரும்பு ஆராய்ச்சி நிறுவனம்

## கிளைகளின் அறிக்கைகள்
## தாவர இன பெருக்கற் பிரிவு

**பதவியாளர்கள்**

| | |
|---|---|
| திரு. ஏ. விஜேசூரிய BSc (Agric), MPhil | தலைமை ஆராய்வு உத்தியோகத்தர், பிரிவு தலைவர் |
| திருமதி. ஏ. எம். எம். எஸ். பெரெரா BSc | ஆராய்வு உத்தியோகத்தர் |
| திருமதி. டி. மானெல் BSc (Agric.), MSc | ஆராய்வு உத்தியோகத்தர் |
| திருமதி. ஏ. எல். சி. குமாரி | தொழில்நுட்ப உத்தியோகத்தர் |
| திரு. டீ. வீரசிங்க | தொழில்நுட்ப உத்தியோகத்தர் |
| திருமதி. எல். டி.டி. பி. குணரத்ன Dip.(Agric.) | தொழில்நுட்ப உத்தியோகத்தர் |
| திரு. டபிள்யூ. ஜி. எம். ஜே. பெரேரா | ஆய்வுக்கூட / கள பணியாளர் |
| திருமதி. எஸ். எச். கருணாரத்ன | ஆய்வுக்கூட / கள பணியாளர் |

**ஆராய்வுகளின் முக்கிய சந்தர்ப்பங்கள்**

- 100 வர்த்தக இன கலப்புகளிலிருந்து பெற்றுக் கொண்ட கரும்பு விதைகளை பாகிஸ்தானுக்கு பெற்றுக்கொடுத்தல்.
- SL 8306, SL 89 1673 மற்றும் SL 92 5588 எனும் 03 இனங்களை வியட்நாமுக்கு பெற்றுக் கொடுத்தல்,
- ROC 23, VN 84 4137 மற்றும் QD 93 159 எனும் இனங்களை வியட்நாமில் இருந்து பெற்றுக் கொள்ளல்.
- SL 99 பெருக்கல் இனங்களின் 05 இனங்கள் மற்றும் SL 98 பெருக்கல் இனங்களில் இருந்து 24 இனங்களை உள்நாட்டு கரும்பு மரபணு பிலாஸ்மாவுடன் ஒன்று சேர்த்தல்.
- கரும்பு மரபணு பிலஸ்மாவின் 1243 கரும்பு இனங்களை என்சல்வத்த இணைப்பு உப நிலையத்தில் பாதுகாத்தல்.
- உள்நாட்டு ரீதியாக சேர்த்துக்கொள்ளப்பட்ட 217 கரும்பு இனங்களில் இருந்து 44 இனங்களின் இனப் பெருக்கல் மதிப்பினை கணித்தல்.
- கள கூண்டு விளக்கு மற்றும் பாதுகாக்கப்பட்ட திரவிய முறைகளை உபயோகித்து 1301 இணைப்புகளை என்சல்வத்தை இனப் பெருக்கல் உப நிலையத்தில் மேற்கொள்ளல்.
- *S.spontaneum* இனம் தந்தைத் தாவரமாகவும் வர்த்தக கரும்பு இனங்கள் மற்றும் *S.officinarum* இனம் தாய்த் தாவரமாகவும் கணித்து 38 இடை விசேட இணைப்புகளும் *Erianthus arundinaceus* எனும் இனத்தை தந்தைத் தாவரமாகக் கொண்டு 21 இடை இணைத்தல்களை மேற்கொள்ளல்.
- SL 95 4033, SL 95 4430 மற்றும் SL 96 328 எனும் 03 கரும்பு இனங்களை வர்த்தக விவசாயத்திற்காக விதந்துரைத்து வெளியிடல்.




அதிகமான சீனி மற்றும் கரும்பு விளைச்சல் தரக் கூடிய எஸ். எல். 328 புதிய கரும்பு இனம்

- SL 2000 பெருக்கல் இனங்களின் 24 இனங்களை உடவளவை, ஹிங்குராணை மற்றும் பெல்வத்தை பிரதேசங்களில் மதிப்பீடுக்கு பாத்திரப்படுத்தல்.
- ஹிங்குராணை மற்றும் மடுல்லை எனும் பிரதேசங்கள் தொடர்பாக கரும்பு இனங்களின் பொருந்தும் தன்மையினை மதிப்பிடல்.
- வெகு சந்தர்ப்ப இனங்கள் தேர்வு செயற்பாடை வெற்றிகரமான முறையில் நடைமுறைப்படுத்தல்.
- தோல் காய்ப்பு நடுதல் மூலம் பாரம்பரிய வேறுபாடுடனான 3158 கரும்பு கன்றுகளை உற்பத்தி செய்தல்.
- SL 7130, SL 8306, SL 88 116 மற்றும் M 438/59 எனும் கரும்பு இனங்களால் உற்பத்தி செய்யப்பட்ட நோய்களற்ற 950 கரும்பு கன்றுகளை பயிர் மற்றும் வளங்கள் முகாமைத்துவ பிரிவின் மூலம் கிளிநொச்சியில் கரும்பு விவசாய மேம்பாட்டு நிகழ்ச்சிக்கு பெற்றுக் கொடுத்தல்.
- நோய்களற்ற விதப் படக்கைகளை ஸ்தாபிப்பதற்கு வர்த்தக மற்றும் வர்த்தக விவசாயத்தற்கு விடுவிக்க அன்மித்த கரும்பு இனங்களால் பெற்றுக் கொண்ட நோய்களின்றிய 4000 ம் கன்றுகள் ஹிங்குராணை கல்ஓயா தோட்ட நிறுவனத்திடம் பெற்றுக் கொடுத்தல்.
- 2011ஆம் ஆண்டின் போது வர்த்தக விவசாயத்திற்காக விடுவிக்கப்பட்ட இனங்களை உச்ச தளிர் நீக்கத்திற்கு உட்படுத்துவதால் பெற்றுக்கொண்ட விதை கரும்பு இனங்களை பரவலாக்கும் செயற்பாடுக்காக பெற்றுக் கொடுத்தல்.
- SL 83 06, SL 88 116 மற்றும் Co 775 எனும் கரும்பு இனங்களின் உச்ச தளிர் வளர்ப்புக்குரிய உயர்தர தாவர ஹோமோன் திரவியங்களை நிர்ணயிக்கப்பட்டது.
- ME, GDH, MDH மற்றும் PEROXYDASE எனும் நொதி உபயோகித்ததால் 44 மரபணு பிலாஸ்மாக்களை மூலக்கூறு விஞ்ஞான வகைப்படுத்தலுக்கு உட்படுத்தல்.
- கந்தளை பிரதேசத்திற்கு பொருத்தமான இனங்களை தேர்ந்தெடுப்பதற்கான ஆராய்ச்சி விவசாயங்களை ஸ்தாபித்தல் தொடர்பாக தேவையான விதை கரும்பு பெற்றுக் கொள்வதற்காக வர்த்தக மற்றும் வர்த்தக விவசாயத்திற்கு அண்மித்த 24 இனங்களை விதைப் பெருக்கல் விவசாயங்களை ஸ்தாபித்தல்.

**அபிவிருத்தி – அடித்தள விதை கரும்பு உற்பத்தி**

வர்த்தக விவசாயத்திற்காக விதந்துரைக்கப்பட்டுள்ள 06 இனங்களான SL 83 06, SL 88 121, SL 95 4033, SL 95 4430, SL 96 328 மற்றும் Co 775 மற்றும் வர்த்தக விவசாயத்திற்கு விடுவிக்க அண்மித்த இனமான SL 96 128 எனும் இனங்கள் உட்பட்டதாக சுமார் 2 ஹெக்டயார் பரிமாணத்தைக் கொண்ட ஒரு கரும்பு விதைப் படுக்கையை உடவளவே பிரதேசத்தில் ஸ்தாபித்தல்.



உடவளவையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள அத்திவார விதைக் கரும்பு நாற்று மேடை

## பயிர்கள் மற்றும் வளங்கள் முகாமைத்துவ பிரிவு

**பதவியணி**

| | |
|---|---|
| கலாநிதி டபிள்யூ. ஆர். ஜி. விதாரம<br>BSc (Agric.), MPhil, PhD | தலைமை ஆராய்வு அதிகாரி மற்றும் துறை தலைவர். |
| திரு. ஏ. எல். சீ. டி. சில்வா<br>BSc (Agric.), M Phil | சிரேஷ்ட ஆராய்ச்சி அதிகாரி |
| திரு. எல். எம். ஜே. ஆர். விஜயவர்தன<br>BSc (Agric.) | ஆராய்ச்சி அதிகாரி |
| திரு. கே. ஏ. ஆரியபால | பண்ணை அதிகாரி |
| திரு. டபிள்யூ. ஜீ. நிமல் | தொழில்நுட்ப உத்தியோகத்தர் |
| திரு. டீ. ஜி. ஜி. எஸ். சந்தநாயக்க (என்.றி.ரி.) | தொழில்நுட்ப உத்தியோகத்தர் |
| திரு. டபிள்யூ. ஏ. யூ. பிரியந்த | தொழில்நுட்ப உத்தியோகத்தர் |
| திரு. எம். எஸ். என். விஜேசிரி | இரசாயனக்கூட / பண்ணை பணியாளர் |

**ஆராய்வுகளின் முக்கிய சந்தர்ப்பங்கள்**

- மழைப் பொழிவு மற்றும் மேலதிக நீர் வழங்கல் எனும் இரு நிலைகளின் கீழும் உயர்தர இடை விளைச்சல்சார் வினைத்திறனை வழங்கக்கூடிய கரும்பு இனங்களாக எஸ். எல். 90 6337 மற்றும் எஸ். எல். 93 945, 92 4918 எனும் இனங்கள் மேலதிக நீர் வழங்கல் நிலையின் கீழ் மாத்திரம் உயர்தர இடை விளைச்சல் வினைத்திறனை தோற்றுகின்ற இனங்களாக இனங்காணல்.




அதிகமான கட்டையிலரும்பும் பயிர் விளைச்சலை பெற்றுக் கொடுக்கும் எஸ். எல். 90 6237 புதிய கரும்பு இனம்

- உழுவும் ஆழம் கரும்பு பயிரின் கன்று விவசாயத்தின் போது மற்றும் பின்னராக எடுக்கப்படும் இடை விவசாயங்களின் போதும் பயிர் அறுவடையால் பெற்றுக்கொள்ளக்கூடிய மரும்பு மரங்களின் எண்ணிக்கையோ அல்லது இம் மரங்களின் எடை தொடர்பாக கறுதக்கூடிய அளவிலான தாக்கங்களை ஏற்படுத்தாதென்பதும் நடு அளவில் மற்றும் ஆழமாக உழவப் படுவதால் கரும்பு பயிரின் ஆரம்ப காலத்தில் ஏற்படக்கூடிய வறட்சி காரணமாக நிலவக்கூடிய அழிவூற்றக்கூடிய தாக்கங்களை குறைத்தக்கொள்ள இயலுமென்பதும் உறுதிபடுத்தப்பட்டுள்ளது.



குறிப்பிட்ட இடை வெளியைக் கொண்டு கன்று நாற்றும் தொழில் நுட்பத்தின் போது விதை கன்றுகள் பெற்றுக் கொள்ளும் விதை மேடை.

- இருந்தே விளைச்சல் பொழிவடைதலுடன் நேரடியான தொடர்பு இருப்பதை உறுதிப்படுத்தல் மற்றும் தொடர்ச்சியாக பாழ் நடுவப்படுவதன் மூலம் இரண்டாவது இடை விவசாயத்தில் இருந்து விளைச்சல் அதிகமாவதும் கரும்பு அடிக்கட்டைகளை வெட்டப்படுவதால் பின் வரும் சந்தர்பங்களின் போது இடை விவசாய விளைச்சல் பொழிவடைவதற்கு காரணமாகும் எனவும் உறுதிப்படுத்தல்.

- குறிப்பிட்ட இடைவெளியுடன் கன்றுகள் நடுவும் தொழில்நுட்பம் (STP) வெற்றிகரமான மற்றும் குறைந்த செலவுடனான பிரசுரல் முறையாக உறுதிப்படுத்தல். இப் பிரசுரல் முறைக்காக கன்றுகளை பெற்றுக்கொள்வதற்காக ஸ்தாபிக்கப்படும் விதைப் படுக்கைகளில் நடுவதற்காக கரும்பு விளைச்சல் அறுவடை செய்ததன் பின்னர் களத்தில் மீதமாகின்ற கரும்பு தளிர்களிடம் இருந்து வேறுபடுத்திக் கொள்ளப்படுகின்ற ஒரு அரும்புரத்தைக் கொண்ட தடிப் பாகங்கள், முற்றிய கரும்புத் தடிகளில் இருந்து பெற்றுக் கொள்ளப் படுகின்ற ஒரு அரும்பைக் கொண்ட தடிகளுக்கு விட உகந்ததெனவும் இவ்வாறாக நடுவதற்காக செலவின்றி விதை கரும்பு பெற்றுக்கொள்ள இயலுமெனவும் உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

- கிளிநொச்சியில் பிரதேச விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தில் 2010 ஆம் ஆண்டின் இரண்டாம் பாகத்தின் போது ஸ்தாபிக்கப்பட்ட சுமார் 0.4 ஹெக்கடயார் நில பரப்பில் பெறுக்கப்பட்ட எஸ். எல். 83 06 இனத்தின் விதைக் கரும்பு 2011 பெரு போகத்தின் மழை பொழிவு ஆரம்பத்துடன் கிளிநொச்சி மாவட்டத்தில் ஸ்கந்தபுரம் எனும் கிராமத்தின் விவசாயிகளுக்கு சொந்தமான ஏழு காணிகளில் மீண்டும் பெருக்கப்பட்டது. இதன் கீழ் ஒவ்வொரு விவசாயிகளும் சுமார் 0.4 ஹெக்கடயார் நில பரப்பில் நடுவப்பட்டதோடு பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள முழு கரும்பு விதை பெருக்கல் நிலப் பரப்பு சுமார் 2.8 ஹெக்கடயாராகும்.


கிளிநொச்சி பிரதேசத்தில் கரும்பு பயிர் நிலங்களை அபிவிருத்தி செய்யும் விவசாயிகள்.

**சேவைகள்**

**அபிவிருத்தி அலுவல்கள் தொடர்பாக**

- ஆராய்ச்சி அலுவல்கள் தொடர்பாக உபயோகிப்பதற்கு சுமார் 32 ஹெக்டயார் பூமிப் பகுதியின் நில அமைப்பு.
- சுடு நீர் சிகிச்சை செய்யப்பட்ட கரும்பு மரங்களை உபயோகித்து எஸ். எல். 83 06 மற்றும் எஸ். எல். 92 5588 இனங்களை பெறுக்கல் தொடர்பாக சுமார் 2 ஹெக்கடயார் பரிமாணத்தைக் கொண்ட விதைப் படுக்கையொன்றை ஸ்தாபித்தல்.
- அஸ்திவார விதைக் கரும்பு உற்பத்தி செய்வதற்கு ஸ்தாபிக்கப்பட்டுள்ள விதைப் படுக்கையில் நடுவதற்காக தேவையான நடல் பொருட்களை பெற்றுக் கொள்வதற்கு தேவையான கரும்பு இனங்களை பெருக்கல்.
- சுடு நீர் சிகிச்சை செய்யப்பட்ட சுமார் 80 தொன் விதைக் கரும்புத் தொகையை தொழில்நுட்பு செலுத்தல் மற்றும் அபிவிருத்திப் பிரிவிடம் பெற்றுக் கொடுத்தல்.
- பண்ணையில் ஆசாய்ச்சி கருத்திட்டங்களை இறுதி செய்யப்பட்டுள்ள பயிர்களிடம் இருந்து பறிக்கப்பட்ட சுமார் 120 தொன் கரும்புத் தொகையை செவனகல தொழிற்சாலைக்கு அனுப்பப் படுதல்.
- அறுவடை செய்யப்பட்ட சுமார் 14 தொன் கரும்புத் தொகையை நிறுவனத்தில் கருப்பட்டி உற்பத்திக்காக பெற்றுக் கொடுதத்ல்.
- அறுவடைச் செய்யப்பட்ட சுமார் 04 தொன் கரும்புத் தொகையை குளிர் பானம் உற்பத்திக்காக பெற்றுக் கொடுத்தல்.

- மின்சார வேலியை பராமரித்தல், தொடர்புப்பட்ட பிரிவுகளுக்கு தொழிலாளர்களை பெற்றுக் கொடுத்தல் மற்றும் இது தொடர்பான அன்றாட அறிக்கைகளை பராமரித்தல்.

**அஸ்திவார விதை கரும்பு உற்பத்திக்காக**

- 03 ஹெக்கடயார் புதிய காணியில் நில அமைப்பு
- 1.5 ஹெக்டயார் ளவைக் கொண்ட ஆரம்ப கட்ட விதைப் படுக்கையினை ஸ்தாபித்தல்.
- இயந்திரமயப் படுத்தும் தொழில்நுட்ப பிரிவின் ஒத்துழைப்புடன் னு4 வாரி வாய்க்காலை புணரமைத்தல் மற்றும் மின்சார வேலியை நிர்மாணித்தல்.
- 02 ஹெக்டயார் காணிகளை சுத்தப்படுத்தல்.

# பயிர் போசாக்குப் பிரிவு

#### பதவியாளர்கள்

| | |
|---|---|
| திரு. எச். ஏ. எஸ். வீரசிங்க BSc | பொறுப்பு ஆராச்சி உத்தியோகத்தர் |
| திரு. ஏ.பீ. ஜே. மொஹொட்டி | தொழில்நுட்ப உத்தியோகத்தர் |
| திரு. ஜி. எஸ். உடவத்த | தொழில்நுட்ப உத்தியோகத்தர் |
| திரு. பீ. டபிள்யூ. டி.குலதுங்க | ஆய்வுக்கூட / கள உதவியாளர் |
| திரு. ஜே. குணசிரி | ஆய்வுக்கூட / கள உதவியாளர் |

#### ஆராய்வுகளின் முக்கிய சந்தர்ப்பங்கள்

- ஹிங்குராணை கரும்பு விவசாயம் செய்கின்ற பிரதேசங்கள் தொடர்பான பசளை மாதிரிகளை 03 வருடங்களும் திருத்தி அமைத்தல்.
- இரு புதிய கரும் இனங்கள் (எஸ். எல். 96 128 மற்றும் எஸ். எல். 96 328) கன்றுப் பயிர்ச்செய்கை நய்ரஜன், பொஸ்பரசு மற்றும் பொடாஸியம் என்பவைக்கு தோற்றிய எதிர்வினை பற்றிய கற்றல்.
- எப்பாவலை உயர்தர பொஸ்பேட் உரம் செலுத்துவதால் மூன்றாவது இடை விளைச்சல் இவ் உரம் வகைக்கு தோற்றிய எதிர்வினை பற்றிய கற்றல்.

#### பகுப்பாய்வு சேவைகள்

2437 கரும்பு மாதிரிகள் தொடர்பாக தேவையான இரசாயன பகுப்பாய்வு சேவைகள் (Brix, Pol and fibre) நிறுவனத்தின் ஏனைய பிரிவுகள் மற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பாக மேற்கொள்ளல்.



எஸ். எல். 96 328 மற்றும் எஸ். எல். 96 128 இனங்கள் உரம் வகைகளுக்கு காட்டக்கூடிய தாக்கங்களை இனங்காணும் ஆராய்வு நிலங்கள்

## பயிர் பாதுகாப்புப் பிரிவு

**பதவியாளர்கள்**

| | |
|---|---|
| திருமதி. வி. கே .ஏ. எஸ். எம். வனசிங்க BSc (2011.09.01 முதல்) | பொறுப்பு ஆராய்வு அதிகாரி |
| திருமதி. எம். கே. ஆர். சில்வா BSc. (Agri), MSc (2011.08.31 வரை) | பொறுப்பு ஆராய்வு அதிகாரி |
| திருமதி. ஏ. என். டபிள்யூ. எஸ். துஷாரி BSc | ஆராய்வு அதிகாரி |
| திரு. எம். கே. டீ. உபேசேன | தொழில்நுட்ப உத்தியோகத்தர் |
| திரு. ஆர். ஏ. பிரேமசந்திர (2011.05.18 வரை) | தொழில்நுட்ப உத்தியோகத்தர் |
| செல்வி. டபிள்யூ. எம். என். எஸ். குமாரி (2011 ஏப்ரல் வரை) | தொழில்நுட்ப உத்தியோகத்தர் |
| திரு. எம். ஆர். பிரேமலால் | ஆய்வுக்கூட/கள உதவியாளர் |
| திரு. டி. எம். ரி. பிரேமலால் | ஆய்வுக்கூட/கள உதவியாளர் |

**ஆராய்வுகளின் முக்கிய சந்தர்ப்பங்கள்**

- பகிஸ்தானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 59 கரும்பு இனங்கள் மற்றும் வியட்நாமில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 03 கரும்பு இனங்களை ஹந்தானை தாவர நோய்தடுப்பு பாதுகாப்பு நிலையத்தில் தற்போது இலங்கையில் அறிக்கையிடப்பட்டில்லா நோய்கள் மற்றும் கிருமிகள் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.
- கரும்பு கம்பளிப் பேனை உயிரியல் ரீதியில் கட்டுப்படுத்துவதில் உபயோகித்தக் கொள்ளும் இயற்கை விரோதிகளான டய்பா அபிடிவோரா (8138 புழுப் பருவ கூடுகள்) மற்றும் மைகிரோமஸ் (11,390 புழுக்கள்) விஞ்ஞானக் கூடத்தினுள் பெருக்கப்பட்டு களங்களில் விடுவித்தல்.
- கரும் பயிர்ச் செய்கையில் "உயிரற்ற இருதயங்கள்" (Dead Heart) நிலையை ஏற்படுத்தும் ரோச நிற இலை காவும் புழுக்களுக்கு மேலதிகமாக பிறதொரு புழு இனத்தை இனங் காணல்.
- ஹிங்குராணை பிரதேசத்தில் புதிதாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள கரும்பு விவசாய நிலங்கள் அருகாமையில் ஏற்பட்ட இலை காவும் புழுக்களின் இழிவை கட்டுபடுத்திக் கொள்வதற்கு தேவையான அறிவுரைகளை பெற்றுக் கொடுத்தல்.
- நோய்கள் மற்றும் கிருமிகள் ஏற்படுவதை தொடர்பாக இலங்கையில் அனைத்து கரும்பு விவசாய பிரதேசங்களில் தொடர்ந்து ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.



கரும்பு வூல் கூடித்தா உயிரியல் ரீதியில் கட்டுப்படுத்துவதில் டய்பா அப்பிடிவோரா பெயரில் இயற்கை எதிரியைப் பாவித்தல்

## இயந்திரமயப்படுத்தல் தொழில்நுட்பப் பிரிவு

**பதவியாளர்கள்**

திரு. கே. எச். டீ. அபேரத்ன BSc (Agric.) — ஆராய்வு பொறுப்பு அதிகாரி
திரு. ஏ. எஸ். எம். ஏ. பெர்னான்டோ
(தொழில்நுட்ப டிப்ளோமா) — தொழில்நுட்ப உத்தியோகத்தர்
திரு. டபிள்யூ. எம். அனுரபால — தொழில்நுட்ப உத்தியோகத்தர்
திரு. வீ. அபேகுணவர்தன — வெல்டர்
திரு. ஜீ. ஆரியரத்ன — பிட்டர்
திரு. டபிள்யூ. ஏ. பிரேமசந்திர — கொல்லன்
திரு. எம். பி. ரொஹான் — பட்டறை உதவியாளர்
திரு. எம். டி. வீரசிரி
ஆய்வுக்கூட/ கள உதவியாளர்
திரு. எச். கே. சுகத் நிர்தன — பொது ஊழியர்
திரு. எஸ். எச். குமாரசிங்க — பொது ஊழியர்
திரு. எம். கே. அதுல சந்தன — பொது ஊழியர்

**ஆராய்வுகளின் முக்கிய சந்தர்ப்பங்கள்**

- துவி சக்கர உழவு இயந்திரத்திற்கு பொருத்தப்பட்ட வெண் இரும்பு பயன்படுத்தி உரம் செலுத்து இயந்திரத்தை வெற்றிகரமாய் நிர்மாணித்து உற்பத்தி செய்தல்.
- இந்திர வடிவத்திலான கரும்பு அரும்புக் களிக்கும் உபகரணமொன்றை நிர்மாணித்து உற்பத்தி செய்தல்.

**சேவைகள்**

- 20 டயின் கல்டிவேடர் உபகரணங்களை உற்பத்திக்கு தேவையான உதரிப் பாகங்களை தயாரித்தல்.
- 2011 ஆம் ஆண்டுக்காக கால நிலை தரவுகளை சேகரித்தல்.
- ஆராய்ச்சிப் பண்ணை மற்றும் விதைக் கரும்பு பண்ணையை சுற்றிவர மின்சார வேலியை பொருத்தல்.
- விதைக் கரும்பு பண்ணைக்காக $D_4$ வாய்க்காலை புணரமைத்தல்.
- ஆராய்ச்சிகள் தொடர்பாக தேவையான ஏனைய இயந்திரோபகரண சேவைகளை வழங்கல்.



நிர்மாணிக்கப்பட்டுள்ள கரும்பு தளிர் வெட்டும் கருவி

## பொருத்துத் தொழில்நுட்பப் பிரிவு

**பதவியாளர்கள்**

| | |
|---|---|
| திருமதி. டபிள்யூ .எம். பீ. வீரக்கொடி BSc | பொறுப்பு ஆராய்வு அதிகாரி (2011.10.31 லரை) |

**ஆராய்வுகளின் முக்கிய சந்தர்ப்பங்கள்**

- மேல் முன்னேற்றம் செய்யப்பட்ட அடையாளங்களுடன் கூடிய யீஸ்ட் மாதிரி உற்பத்திக்காக பலதரப்ட்ட மூலங்களில் இருந்து ஒன்பது (09) யீஸ்ட் மாதிரிகளை பிரித்தெடுத்தல் மற்றும் அதனை பராமரித்தல்.
- உயிரின உரம் உற்பத்திக்காக பொஸ்பேட் திரவிய நிலைக்கு ஏற்படுத்தக்கூடிய ஆறு (06) பக்டீரியா மாதிரிகளை பிரித்தெடுத்தல்.
- பழம் உருசியுடைய கரும்புச் சாறு பானம் உற்பத்திக்காக கரும்புச் சாறு, நீர், எலுமீச்சை சாறு மற்றும் இஞ்சிச் சாறு உபயோகித்து மிகப் பொருத்தமான அளவுகளைக் கொண்ட ஐந்து (05) கழப்பினங்களை நிர்ணயித்தல்.

## பொருயியல், உயிர் புள்ளிவிபரவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பப் பிரிவு

**பதவியாளர்கள்**

| | |
|---|---|
| திரு. கே. ஏ. டீ. கொடிதுவக்கு BSc (Agric.) | ஆராய்வு பொறுப்பு அதிகாரி |
| கலாநிதி. ஏ. பீ. கீர்திபால BSc (Agric.), MPhil, PhD | ஆராய்வு உத்தியோகத்தர் (விடுமுறையில்) |
| திருமதி. பி. டி. எஸ். கே. ஆரியவன்ச BSc (Agric.) | ஆராய்வு உத்தியோகத்தர் |
| செல்வி. எம். ஜி. வை. மாதவி BSc | தொழில்நுட்ப உத்தியோகத்தர் |

**ஆராய்வுகளின் விசேட சந்தர்ப்பங்கள்**

- செவனகல பிரதேசத்தில் மழைப் பொழிவுடனான மற்றும் வாரி நீர் வழங்கும் பிரதேசங்களில் கரும்பு விவசாயத்தில் வரவு செலவுகளை மதிப்பீடுக்கு உட்படுதத்ல்.
- மொனறாக்கலை மற்றும் பதுளை பிரதேசங்களின் கரும்பு கருப்பட்டி உற்பத்தியின் வரவு செலவுகளை மதிப்பீடுக்கு பாத்திரப்படுத்தல்.
- பெல்வத்தை பிரதேசத்தின் மழைப் பொழிவு நிலையில் காணக்கூடிய அடையாளங்களில் இருக்கும் தன்மைகளை கற்றல்.

**பகுப்பாய்வு சேவைகள்**

- பயிர் மேல் முன்னேற்றுப் பிரிவு, பயிர் பாதுகாப்புப் பிரிவு மற்றும் பயிர் போசாக்குப் பிரிவுக்காக ஆராச்சித் திட்டங்களை ஒழுங்கமைத்தல்.
- ஆரம்ப அறுவடை பற்றிய ஆராய்வுகள் மற்றும் வெளிவந்திருக்கும் அறுவடை ஆராய்ச்சிகளின் தரவுகளை பகுப்பாய்வு செய்தல் மற்றும் பயிர் பாதுகாப்பு, பயிர்சார் வளங்களை முகாமைத்துவப் படத்தல், பயிர் போசாக்கு மற்றும் இயந்திரமயப்படுத்துத் தொழில்நுட்ப பிரிவுகள் தொடர்பாக ஆராய்ச்சி தரவுகளை பகுப்பாய்வுச் செய்துக் கொடுத்தல்.

**தகவல் தொழில்நுட்ப சேவைகள்.**

- நிறுவனத்தின் இணைய தளத்தை பராமரித்தல் மற்றும் அதனை மெருகூட்டல்.
- நிறுவனத்தினுள் இ - அரச கொள்கைகளுக்குரிய தகவல் தொழில்நுட்ப அலுவல்களை நடைமுறைப்படுத்தல்.
- இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்ளைகள் சபை (**CARP**) நிறுவனத்தினால் கோவை படுத்துகின்ற தேசிய ஆராய்ச்சி தகவல்கள் வலைப் பின்னலுக்கு தேவையான தகவல்களை பெற்றுக் கொடுப்பதற்காக 2011 ஆம் ஆண்டுக்குரியதாக கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தின் **INFORM** கணனித் தரவுகள் களஞ்சியத்தை ஏற்பாடு செய்தல்.
- கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தினள் இ - அரச கொள்ளைகளை நடைமுறைப் படுத்துவதற்கான தகவல்களை இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்திற்கு (**ICTA**) பெற்றுக் கொடுத்தல்.

## தொழில்நுட்ப பரிமாற்றல் மற்றும் அபிவிருத்திப் பிரிவு

**பதவியாளர்கள்**

| | |
|---|---|
| திரு. ஏம். எஸ். பெரேரா BSc (Agric.), MPhil | பொறுப்பு ஆராய்வு உத்தியோகத்தர், மற்றும் தலைவர் |
| திரு. டி. பி. டபிள்யூ. பொத்தெவல BSc (Agric.), PGD(B.Mg) | தொழில்நுட்ப செலுத்து உத்தியோகத்தர் |
| திரு. ஆர். ஏ. பீ. ஏ. ரணதுங்க | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திரு. கே. பீ. விக்ரமசிங்க BSc (Agric.) | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திரு. எஸ். என். விக்ரமசிங்க BSc (Agric.) MSc | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திரு. டபிள்யூ. டி. எம். எஸ். வேராகொடBSc | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திரு. ஆர். ஏ. பிரேமசந்திர | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (2011.06.01 முதல்) |

**தொழில்நுட்ப செலுத்தல்கள் மற்றும் அபிவிருத்திப் பணிகள்**

- **எஸ். எல். 83 06, எஸ். எல். 121 எஸ். எல். 92 4918, எஸ். எல். 92 4997 மற்றும் எஸ். எல். 92 5588 எனும் புதிய கரும்பு இனங்களை விவசாயிகளிடம் பிரசுரப் படுத்தல்.**
  - கரும்பு தொழிற் பகுதிகளில் 16 மாதிரி விதைப் பெருக்கல் படுக்கை பயிர்ச் செய்கை நிலங்களை ஸ்தாபித்தல்.
  - ஆரம்ப விதைப் படுக்கைகள் ஸ்தாபிப்பதற்கு எஸ். எல். 96 328 07 தொன்), எஸ். எல். 88 116 (02 தொன்) மற்றும் எஸ். எல். 96 128 (01 தொன்) செவனகல சீனி உற்பத்தி நிலையத்திற்கு பெற்றுக் கொடுத்தல்.
  - செவனகல சீ 07 பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள எஸ். எல். 96 328 மற்றும் தமன பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டள்ள எஸ். எல். 88 116 இனங்களின் மாதிரிகள் மற்றும் பெறுக்கல் விதைப் படுக்கைகளை பராமரித்தல்.
  - சீனி தொழில் நிலவும் பிரதேசங்களில் 12 மாதிரி நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
  - எஸ். எல். 89 1673, எஸ். எல். 92 4918, எஸ். எல். 92 4997, எஸ். எல். 92 5588, எஸ். எல். 95 4033, எஸ். எல். 95 4430 மற்றும் எஸ். எல். 96 328 எனும் புதிய கரும்பு இனங்கள் தொடர்பான தகவல் துண்டுப் பிரசுரங்களின் ஆரம்ப கட்ட பிரதிகளை தயாரித்தல்.

- **கரும்பு பயிர்ச் செய்கை தொடர்பாக கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தால் அபிவிருத்தி செய்யப்பட்டு அறிமுகப் படுத்தப்பட்டுள்ள பண்ணை உபகரணங்களான டயின் கல்டிவேடர் மற்றும் வாய்க்கால் அமைக்கும் உபகரணங்களின் பாவனையை பிரபலப்படுத்துதல்.**
    - டயின் கல்டிவேடர் மற்றும் வாய்க்கால் அமைக்கும் உபகரணங்கள் தொடர்பாக 10 மாதிரி / பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தல்.
    - தமது விவசாய நிலங்களில் உபயோகித்து அதன் பொருத்தத்தை கணிப்பதற்கு மற்றும் அது தொடர்பாக பயில விரும்பும் விவசாயிகளுக்கு தேவைப்படும் போது பெற்றுக் கொள்வதற்காக தலா 01 கல்டிவேடர் இயந்திரங்களை புத்தளை, சியபலாண்டு மற்றும் ஹிங்குராணை அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவல்களில் வைத்து வசதியளித்தல்.
    - இயந்திரமயப்படுத்தல் தொழில்நுட்ப பிரிவால் 20 டயின் கல்டிவேடர் இயந்திரங்கள் மற்றும் 05 வாய்க்கால் அமைக்கும் உபகரணங்கள் உற்பத்தி செய்வதில் தேவையான பாகங்களை உற்பத்தி செய்தல்.
    - டிபல்வத்தை பிரதேச விவசாய அமைப்புகளுக்கு 04 டயின் கல்டிவேடர் இயந்திரங்களை கழிவு விலைக்கு பெற்றுக் கொடுத்தல்.

- **கரும்புடன் இடை பயிர்ச் செய்கையாக வெள்ளரிக்காய், நிலக் கடலை, கவ்பி, வத்தகை மற்றும் மிளகாய் உபயோகித்தலை மேம்படுத்தல்.**
    - கரும்புடன் இடைப் பயிர்ச் செய்கைக்கான 20 மாதிரிகளை ஸ்தாபித்தல்.
    - சீ 07 பிரதேசத்தில் 0.5 ஹெ. நிலப் பகுதியில் கரும்புப் பயிர்ச் செய்கையுடன் வெள்ளரிக்காய், நிலக் கடலை மற்றும் வத்தகை இடைப் பயிர்ச் செய்கையாக விவசாயம் செய்து கள மாதிரியாக ஸ்தாபிப்பதற்கு செவனகல சீனி தொழிற்சாலையுடன் ஒருங்கிணைதல்.
    - கரும்புப் பயிருடன் இடைப் பயிர்ச் செய்கைகளின் மாதிரிகள் / 10 பயிற்சி நிகழ்வுகளை நடாத்தல்.



கரும்பு பயிருடன் கக்கரிக்காய் ஊடுபயிராக இடப்பட்ட கரும்பு விளைச்சல் நிலம்

- **மண் செழிப்பு முகாமைத்துவம் பற்றிய அறிவை உயர்த்தல்.**
    - புத்தளை, சியபலாண்டு மற்றும் ஹிங்குராணை பிரதேசங்களில் விவசாய ஆராய்வு மற்றும் கலந்துரையாடல் நிகழ்ச்சிகளை நடாத்தல்.
    - ஹிங்குராணை பிரதேசம்சார் கள உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள் தொடர்பாக புதிய உரம் மாதிரிகள் பற்றி அறிவூட்டல் நிகழ்ச்சிகளை நடாத்தல்.
    - ஹிங்குராணை பிரதேசம்சார் விவசாயிகளுக்கு உரம் செலுத்தல் தொடர்பான விதிமுறைகளின் மாதிரிகளை நடாத்தல்.

- **இடை வெளியுடன் கரும்பு நடுவதை மேம்பாடு செய்தல்.**
    - ஹிங்குராணை பிரதேசத்தில் 03 கள மாதிரிகளை ஸ்தாபித்தல்.
    - கள மாதிரிகளை ஸ்தாபிப்பதற்காக செவனகல சீனி உற்பத்திச்சாலை மற்றும் சிவில் பாதுகாப்பு அணியுடன் ஒருங்கிணைதல்.

- இடை வெளியுடன் கரும்பு நடுதல் தொடர்பான 07 மாதிரி / பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தல்.
- இடை வெளியுடன் கரும்பு நடுதல் தொடர்பான அறிவுரை துண்டுப் பிரசுரங்களின் ஆரம்பக் கட்ட பிரதிகளை ஏற்பாடு செய்தல்.

- **கரும்பு விவசாயம் தொடர்பாக விதந்துரைக்கப்பட்டுள்ள தாவரவியல்சார் செயற்பாடுகளின் பாவனையை அதிகப் படுதத்ல்.**
    - விவசாயிகள் / உத்தியோகத்தர்களுக்கு 17 பயிற்சி நிகழ்வுகளை நடாத்தல்.
    - புத்தளை பிரதேசத்தில் சிறந்த முறையில் பராமரித்திருக்கும் கரும்பு விவசாய களங்களை பார்வையிட கள பயணமொன்றை ஏற்பாடு செய்தல்.

- **நோய்கள் மற்றும் கிருமிகள் கட்டுபாடு தொடர்பான அறிவை உயர்த்தல்.**



கரும்பு விவசாய நிலங்களை பார்வையிட கள பயணத்தை மேற்கொண்ட விவசாயிகள்

- கரும்புப் பயிர்ச் செய்கையில் காணப்படும் கரும்பு கம்பளிப் பேன் தொடர்பான உயிரியல்சார் கட்டுபாடு பற்றிய 05 கள மாதிரிகளை பராமரித்தல்.
- கரும்பு விவசாயத்தில் நோய்கள் மற்றும் கிருமிகள் கட்டுபாடு தொடர்பாக 12 மாதிரி / பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தல்.
- நோய்கள் மற்றும் கிருமிகள் கட்டுபாடு தொடர்பாக 02 புலடின்களின் வரைவுப் பிரதிகளை ஏற்பாடு செய்தல்.

- **கரும்பு கருப்பட்டி உற்பத்தியை மேல் முன்னேற்றப் படுதல்.**
    - கரும்பு விவசாயம் / கருப்பட்டி உற்பத்திப் பற்றிய 03 பயிற்ச்சி நிகழ்ச்சிகளை நடாத்தல்.

- சியபலாண்டு பிரதேசத்தின் கரும்பு கருப்பட்டி மில்களை நவீனமயப் படுத்துவதற்கான திட்மொன்றை ஏற்பாடு செய்வதற்காக பிரதேச வங்கிகளுடன் ஒருங்கிணைதல்.
- கடன் திட்டங்களின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கரும்பு விவசாய நிலங்களை பிரதேச வங்கிகளுடன் இணைந்து பரிசோதித்தல்.
- கரும்பு விவசாய நிலங்களின் மேம்பாடு மற்றும் வளர்ச்சி தொடர்பாக மீளாய்வு செய்வதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்கு 04 கூட்டங்களை நடாத்தல்.

- **வேண்டுகோள்களுக்கு அமைவாக பயிற்சிகள் மற்றும் சேவைகளை வழங்கல்.**
  - புத்தளையில் இடம் பெற்ற தயட்ட கிருள – 2011 கண்காட்சி, அம்பிலிப்பிட்டி மகா வித்தியாலயத்தில் இடம் பெற்ற 05 நாள் கண்காட்சி மற்றும் வவுனியாவில் இடம் பெற்ற தேசிய விவசாய கண்காட்சிகளின் போது கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தால் கண்காட்சி அறைகளை பராமரித்தல்.
  - கிளிநொச்சியில் விவசாயிகள் / உத்தியோகத்தர்கள், வெள்ளவாய் போர்ப் படை முகாங்களின் உறுப்பினாகள் மற்றும் சியபலாண்டு சிவில் பாதுகாப்பு அணி உறுப்பினர்கள் தொடர்பாக கரும்பு விவசாயம் தொடர்பாக 03 பயிற்சிப் பட்டறைகள் நடாத்தல்.
  - தேசிய பயிர்ச் செய்கை முகாமைத்துவ நிறுவனத்தின் 08 டிப்ளோமா மாணவர்களுக்காக கரும்பு விவசாய மாதிரியினை ஒருங்கிணைத்தல்.

**அச்சுப் பதிவு சேவைகள்**

- ‘புவத் ஹசுன’ (2011 ஆகஸ்ட்) மாதாந்த சஞ்சிகையை வெளியிடல்.
- 2009 ஆண்டறிக்கையினை அச்சுப் பதிவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- திருத்தி அமைக்கப்பட்ட கரும்பு ஆரராய்ச்சி நிறுவனம் பற்றிய சிறு புத்தகத்தை (2011) அச்சுப் பதிவு செய்தல்.

## நிர்வாக மற்றும் கணக்குப் பிரிவு

**பதவியாளர்கள்**

| | |
|---|---|
| கலாநிதி. திரு. என்.சீ.குமாரசிங்க BSc, MSc, PhD, FRES (UK), FIBIOL, FAASN, பட்டயக் உயிரியல் விஞ்ஞானி | பணிபப்பாளர்/தலைமை நிறைவேற்றதிகாரி, |
| திரு. டி. ஜி. மானமுதலி BA, LICA | பிரதி பணிப்பாளர் (நிர்வாக மற்றும் நிதி) |
| கலாநிதி. திரு. ஏ. பீ. கீர்திபால BSc (Agric.), MPhil, PhD | பதில். பிரதி பணிப்பாளர் (ஆராய்வு மற்றும் தொழில்நுட்ப முதலீடு) |

**நிர்வாக சேவையணி**

| | |
|---|---|
| திரு. சீ. எபிட்டவல MA, PhD | நிர்வாக உத்தியோகத்தர் |
| திரு .என். ஜி. ஏ. பி. நானயக்கார BSc Mgt.(Pub) | நிர்வாக உத்தியோகத்தர் |
| திருமதி .டி. ஏ. டி. எம். ஜி. ஜயதிலக | முகாமைத்துவ உதவியாளர் (தட்டச்சாளர்/எழுத்தர்) |
| திருமதி .ஜே. கே. சந்திரலதா | முகாமைத்துவ உதவியாளர் (எழுத்தர்) |
| திருமதி .டி. எம். கே. சேனாதீர | முகாமைத்துவ உதவியாளர் (தட்டச்சாளர்/எழுத்தர்) |
| திருமதி .எம். எம். ஐ. கே. மெணிக்கடவர | முகாமைத்துவ உதவியாளர் (எழுத்தர்) |
| திருமதி .ஜி. சோமவீர | முகாமைத்துவ உதவியாளர் (தட்டச்சாளர்/எழுத்தர்) |
| செலவி. .எம். ஏ. ஆர். சமரசேகர | முகாமைத்துவ உதவியாளர் (தட்டச்சாளர்/எழுத்தர்) |
| திருமதி .ஓ. யூ. சுபசிங்க | முகாமைத்துவ உதவியாளர் (தட்டச்சாளர்/எழுத்தர்) |
| திரு .எஸ். பி. என். யூ. எஸ். விமலசூரிய | சாரதி |
| திரு .ஒஸ்டின் பெரேரா | சாரதி |
| திரு .ஏ. டபிள்யூ. கே. ஹெட்டிஆரச்சி | சாரதி |
| திரு .எஸ். எல். பீரிஸ் | சாரதி |
| திரு .எச் எல். யூ. எஸ். பிரேமரத்ன | சாரதி |
| திரு .டபிள்யூ. பி. எல். சந்திரசிரி | சாரதி |
| திரு .ஜே. பீ. எஸ். பி. கருணாதிலக | சாரதி |
| திரு .டி. பி. கே. ஜயரத்ன | சாரதி |
| திரு .ஆர். ஜி. டி. ஏக்கநாயக்க | சாரதி |
| திரு .எஸ். ஏக்கநாயக்க | சாரதி |

**கணக்குப் பிரிவு**

| | |
|---|---|
| திரு. டி. எம். சிரிபால BCom | கணக்காளர் |
| திரு. பி. எச். யூ. நிஸ்ஸங்க HNDA, ICA. (Intermediate) | உதவி கணக்காளர் |
| செல்வி. பி. எம். அமரசிங்க | கணக்கு வைப்பாளர் |
| திரு. எல். பி. விர்தமுல்ல | முகாமைத்துவ உதவியாளர் (கணக்கு எழுத்தர்) |
| திரு. ஜி. எம். எஸ். நந்ததேவ | முகாமைத்துவ உதவியாளர் (கணக்கு எழுத்தர்) |
| திருமதி. ஏ. கே. அமரகோன் | முகாமைத்துவ உதவியாளர் (கணக்கு எழுத்தர்) |
| திரு. எல். கே. எஸ். தயாநந்த | முகாமைத்துவ உதவியாளர் (கணக்கு எழுத்தர்) |
| திரு. டி. எம். பி. நிக்ஸன் | முகாமைத்துவ உதவியாளர் (கணக்கு எழுத்தர்) |
| திரு. ரி. ரஞ்சித் பீரிஸ் | முகாமைத்துவ உதவியாளர் (எழுத்துவினைஞர், தட்டச்சாளர்) |

**களஞ்சியச்சாலை**

| | |
|---|---|
| திரு. ஆர். ஜி. நிரோஷன | பண்டசாலை பொறுப்பாளர் |
| திரு. எஸ். ஏ. சேனாரத்ன | பொது தொழிலாளர் (பண்டசாலை) |

**உள்ளக கணக்காய்வுப் பிரிவு**

| | |
|---|---|
| திரு.எஸ்.பி.வை.முணிந்திர ICA (intermediate),MAAT | உள்ளக கணக்காய்வாளர் |

**கேள்விப் பிரிவு**

| | |
|---|---|
| திரு. எச். பீ. ஆர். குமார B.B.Mgt. | - கேள்வி உத்தியோகத்தர் |

**பராமரிப்புப் பிரிவு**

| | |
|---|---|
| திரு. ஆர். பாலமுரே | - மின்சார தொழிநுட்பர் |
| திரு. ஜே. விக்கிரமாராச்சி | - தச்சர் / மர தொழிலாளர் |
| திரு. டீ. டபிள்யூ. எஸ். சிந்தன | - மர தொழிலாளர் |
| திரு. ஆர். பீ. குலதுங்க | - மர தொழிலாளர் |
| திரு. டி. எச். தர்மதாச | - நீர் குழாய் இயக்குநர் |
| திரு. எச். பீ. சந்திரவன்ச | - நீர் குழாய் இயக்குநர் |
| திரு. கே. எச். வீரரத்ன | - நீர் மோட்டார் இயக்குனர் |
| திரு. ஆர். எம். பிரியந்த | - பொது ஊழியர் |
| திரு. எம். ஏ. ஜீ. ரணசிங்க | - பொது ஊழியர் |

**வருடத்தினுள் நிறைவேற்றப்பட்டுள்ள செயற்பாடுகளின் பொழிவு**

- நிறுவனத்தின் பொது நிர்வாக அலுவல்கள், ஆட்கள் முகாமைத்துவ அலுவல்கள் மற்றும் பராமரிப்புப் பணிகள் இவ் வருடத்தினுள்ளும் மேற்கொண்டு பொகப்பட்டன.

- நலன்புரி சேவைகள் அடிப்படையில் அனுமதிக்கப்பட்டுள்ள அளவு வரை சேவையாளாகளுக்கு கடன் தொகைகளை பெற்றுக் கொடுத்தல் மற்றும் மருத்துவ செலவுகளை மீள செலுத்தும் அலுவல்களை தொடர்ந்து மேற்கொள்ளல்.
- உரிய விதத்தில் நிறுவனத்தின் வரவு செலவு மற்றும் நிதிசார் அறிக்கைகளை ஒழுங்கமைத்தல், வருடாந்த இருப்புகளை பரிசோதித்தல் மற்றும் முகாமைத்துவ தகவல்களை பெற்றுக் கொடுத்தல்.

**நிதிசார் அலுவல்கள் தொடர்பான மீளாய்வு**

- நிறுவனததின் பிரதான வருமான வழியான ஸெஸ் வருமானம் இவ் வருடத்தின் போது 144 மில்லியன் ரூபாக்களாக இருந்ததோடு அது சென்ற வருடத்துடன் ஒப்பிடும் போது 0.8% அதிகரிப்பாகும்.
- அவ்வாறே நிறுவனத்தின் வரவு செலவு தொடர்பான ஒப்பீட்டின் போது 19.4 மில்லியன் ரூபா மிகை இவ் வருட இறுதியில் காட்டப்பட்டுள்ளது.
- இவ் வருடத்தினுள் செய்திருக்கும் மூலதன செலவுகளின் மொத்தம் 4,491 மில்லியன் ரூபா.

**2011 ஆம் ஆண்டினுள் சேவையணிசார் மொத்தத் திரும்பல் பதவியணியினரை வலுப்படுத்தல் மற்றும் செயல் நோக்குறுத்து ஓய்வுப் பெறல்**

| | | |
|---|---|---|
| திரு. பீ.. கருணாதாச | பொது ஊழியர் | 2011.01.06 |
| திரு. அபயரத்ன விதான | சாரதி | 2011.02.01 |
| திரு. டபிள்யூ. பீ. எல். சந்திரசிரி | சாரதி | 2011.05.31 |

**இராஜினாமாக்கள்**

| | |
|---|---|
| திருமதி. எம். கே. ஆர். சில்வா | ஆராய்வு உத்தியோகத்தர் 2011.08.11 |
| திருமதி. டபிள்யூ. எம். பீ. வீரக்கொடி | தொழில்நுட்ப உத்தியோகத்தர் 2011.11.02 |
| செல்வி. டபிள்யூ. எம். என். எஸ்.குமாரி | தொழில்நுட்ப உத்தியோகத்தர் 2011.04.11 |

**பதவியாளர்கள் பயிற்சி மற்றும் மாநாடு சம்மேளனங்களில் பங்கேற்றல்.**

உயிர் புல்லியியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப ஆராய்வு உத்தியோகத்தர் திருமதி பீ. டீ. எஸ். கே. ஆரியவன்ச 2011 மார்ச் மாதம் 30 ஆம் திகதி பத்தரமுல்லையில் இடம் பெற்ற மின் கட்டுப்பாடு செய்தி (E – government policy) தொடர்பான சம்மேளனத்தில் பங்கேற்றல்.

பயிர் போஷாக்கு ஆராய்வு உத்தியோகத்தர் திரு. எச். ஏ. எஸ். வீரசிங்க மற்றும் பதப்படுத்தல் தொழில்நுட்ப ஆராய்வு உத்தியோகத்தர் செல்வி டபிள்யூ. எம். பீ.

வீரக்கொடி தர சான்றுப்படுத்தல் தொடர்பான நெறியாளர்களுக்கு துணையளித்தல் தொடர்பாக 2011 ஜீன் 09 ஆம் திகதி நடைப்பெற்ற சம்மேளனத்தில் பங்கேற்றல்.

பதப்படுத்தல் தொழில்நுட்ப ஆராய்வு உத்தியோகத்தர் செல்வி டபிள்யூ. எம். பீ. வீரக்கொடி ISO 2200 – 2005 உணவு பாதுகாப்பு முகாமைத்துவ முறைகள் தொடர்பாக 2011 ஜூலை 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் கொழும்பில் இடம் பெற்ற செயற் பட்டறையில் பங்கேற்றல்.

பயிர் போஷாக்கு ஆராய்வு உத்தியோகத்தர் திரு. எச். ஏ. எஸ். வீரசிங்க நெனோ தொழில்நுட்பம் மற்றும் அதன் பாவனை தொடர்பாக 2011 செப்தம்பர் 30 ஆம் திகதி கொழும்பு இரசாயனவியல் நிறுவனத்தில் இடம்பெற்ற பயிற்சிப் பட்டறையில் பங்கேற்றல்.

தாவர உடற் கூறுவியல் பற்றிய சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு. ஏ. எல். சீ. டி சிலவா நிர்மாணித்தல் பகுப்பாய்வு தொடர்பாக 2011 அக்தோபர் 30 ஆம் திகதி 27 முதல் 29 வரை கொழும்பில் இடம் பெற்ற பயிற்சிப் பட்டறையில் பங்கேற்றல்.

பணிப்பாளர் கலாநிதி திரு. என். சீ. குமாரசிங்க, பயிர் மற்றும் வளங்கள் முகாமைத்துவ பிரிவின் தலைமை ஆராய்ச்சி உத்தியோகத்தர் கலாநிதி திரு. டபிள்யூ. ஆர். ஜீ. விதாரம, பொருளியல், உயிர் புல்லியியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப பிரிவின் பொறுப்பு உத்தியோகத்தர் திரு. கே. ஏ. டீ. கொடிதுவக்கு, இயந்திரமயப் படத்தல் தொழில்நுட்ப பிரிவின் பொறுப்பு ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு. கே. டீ. எச். அபேரத்ன, தொழில்நுட்ப செலுத்து உத்தியோகத்தர் திரு. டீ. பீ. டபிள்யூ. பொத்தவெல, உயிர் தொழில்நுட்ப ஆராய்ச்சி உத்தியோகத்தர் செல்வி. ஏ. எம். எம். எஸ். பெரேரா, பயிர் போஷாக்கு பிரிவின் பொறுப்பு ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு. எச். ஏ. எஸ். வீரசிங்க மற்றும் அபிவிரத்தி உத்தியோகத்தாகளான திரு. ஆர். ஏ. பீ. ரணதுங்க, திரு. டபிள்யூ. ஜீ. எம். எஜ். வேரகொட, திரு. எஜ். என். விக்கிரமசிங்க மற்றும் திரு. கே. பீ. விக்கிரமசிங்க ஈகியொர் 2011 நவம்பர் மாதம் 2 ஆம் திகதி கொழும்பில் இடம் பெற்ற அபிவிருத்தி பயிற்சிப் பட்டறையில் பங்கேற்றினர்.

பொருளியல் மற்றும் தகவல் தொழிநுட்ப பிரிவின் பொறுப்பு ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு. கே. ஏ. டீ. கொடிதுவக்கு நிலையான விவசாயம், உணவு பாதுகாப்பு மற்றும் வறுமையினை குறைத்தல் பற்றிய கொள்கைசார் ஆராய்ச்சி தொடர்பாக 2011 நவம்பர் மாதம் 14 முதல் 18 அம் திகதி வரை பேராதணையில் இடம் பெற்ற பயிற்சிப் பட்டறையில் பங்கேற்றல்.

கருமபுப் பயிற்சி நிறுவனத்தின் தலைவர் திரு. எஸ். கே. சிரில், பணிப்பாளர் கலாநிதி திரு. என். சீ. குமாரசிரி, பயிர் மற்றும் வள முகாமைத்துவ பிரிவின் தலைமை ஆராய்ச்சி உத்தியோகத்தர் கலாநிதி திரு. டபிள்யூ. ஆர். பீ. விதாரம 2011 நவம்பர் மாதம் 21 முதல் 25 வரை இந்தியா புதுதில்லியில் இடம் பெற்ற நான்காவது சர்வதேச சீனி சம்மேளனத்தில் பங்கேற்றல்.

பணிப்பாளர் கலாநிதி திரு. என். சீ. குமாரசிரி, பயிர் மற்றும் வள முகாமைத்துவ பிரிவின் தலைமை ஆராய்ச்சி உத்தியோகத்தர் கலாநிதி திரு. டபிள்யூ. ஆர். பீ. விதாரம, நீர் முகாமைத்துவம் தொடர்பான ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு. எல். எம். ஜே. ஆர். விஜேவர்தன இலங்கை விஞ்ஞானிகளின் அறிவை பகிர்ந்துக் கொள்வதன்

மூலம் பலப்படுத்தல் பற்றிய 2011 திசெம்பர் 13 முதல் 15 வரை கொழும்பில் இடம் பெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்றல்.

முகாமைத்துவம் தொடர்பான ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு. எல். எம். ஜே. ஆர். விஜேவர்தன உலக தகவல் / தொழில்நுட்ப முறைகள் (GIS) தொடர்பாக 2011 நவம்பர் 21 முதல் 26 வரை பேராதனை பல்கலைக்கழகத்தில் இடம் பெற்ற குறும் பாடநெறியில் பங்கேற்றல்.

பயிர் போஷாக்குப் பிரிவில் பொறுப்பு ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு. எச். ஏ. எஸ். வீரசிங்க 2011 திசெம்பர் 19 ஆம் திகதி கண்டியில் இடம் பெற்ற நுண்ணுயிர் உரம் பாவனை தொடர்பான சம்மேளனத்தில் பங்கேற்றல்.
உள்ளக கணக்காய்வாளர் திரு. எஸ். பீ. வை. மனின்திர மற்றும் களஞ்சிய பொறுப்பாளர் திரு. ஆர். ஜீ. எஸ். நிரோஷன் 2011 திசெம்பர் 23 முதல் 25 வரை கொழும்பில் இடம் பெற்ற நிலையான சொத்துக்களின் முகாமைத்துவம் பற்றிய பயிற்சிப் பட்டறையில் பங்கேற்றல்.

உயிர் புள்ளியியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப ஆராய்வு உத்தியோகத்தர் திருமதி பீ. டீ. எஸ். கே. ஆரியவன்ச நவீன உலகத்திற்கான தொழில்நுட்ப விஞ்ஞான சங்கட்பங்கள் மற்றும் விதி முறைகள் தொடர்பாக 2011 திசெம்பர் 28 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை கொழும்பில் இடம் பெற்ற சர்வதேச இலங்கை புள்ளிவிபர விஞ்ஞான சம்மேளனத்தில் பங்கேற்றல்.

## வெளியீடுகள்


i. டி சில்வா ஏ. எல். சீ, டி கொஸ்தா டபிள்யூ. ஏ. ஜே. எம். மற்றும் பண்டார டீ. மெ. யூ. எஸ். (2011), இலங்கையில் நீர்ப் பாசானம் மற்றும் நீர் வழங்கல் நிலையின் கீழ் கரும்பு வேர்களின் வளர்ச்சி மற்றும் மண் நீரிழிப்பை பயன்படுத்திக் கொள்ளும் முறைகள். ஷுகர் ரெக், 13 வது காண்டம் (3), பக்க எண் 198 – 205.

ii. டி சில்வா ஏ. எல். சீ, (2011), உப ஈரத்தன்மையான காலநிலையின் போது கரும்புப் பயிரின் உடற்கூறுயியல் சார் அசைவுகள். லெப் லெம்பர்ட் கலை வெளியீட்டாளர் நிறுவனம்.

iii. டி சில்வா ஏ. எல். மற்றும் விதாரம டபிள்யூ. ஆர். ஜீ. (2011), இடை வெளியுடன் கரும்பு கன்றுகள் நடுவும் தொழில்நுட்ப பயிர்ச் செய்கை பொருளாக கரும்பு தளிர்களிலுள்ள பயன். விவசாயம் மற்றும் சுற்றாடலை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச கலை சம்மேளனத்தின் செயற்பாடு அறிக்கை. 2011. விவசாய பீடம், ருகுணு பல்கலைக்கழகம், மாபலான, கம்புருப்பிட்டி, இலங்கை. பக்கம் 20.

iv. குமாரசிங்க என். சீ. மற்றும் விஜயவர்தன எல். எம். ஜே. ஆர். (2011). இலங்கையின் கரும்பு விவசாயத்திற்கு காலநிலையின் பாதிப்புகள். விவசாயத்தினால் காலநிலை மாற்றம் அடைவதிலான தாக்கங்கள் தொடர்பாக நடாத்தப்பட்ட சர்வதேச மாநாட்டின் விஞ்ஞான அறிக்கை. விவசாய பீடம், ருகுணு பல்கலைக்கழகம், மாபலான, கம்புருப்பிட்டி, இலங்கை.

v. குமாரசிங்க என். சீ. (2011) இலங்கை சீனி தொழிலின் கடந்த காலம், நிகழ் காலம் மற்றும் எதிர்காலம். இலங்கை பயிர்ச் செய்கையாளர்களின் சங்கம் 75 வது ஆண்டு நிறைவு விழா பற்றிய கூற்று. 70 – 75.

vi. வீரசிங்க, எச். ஏ. எஸ் (2011). இலங்கையில் கரும்பு விவசாயம் செய்கின்ற மண்ணிலுள்ள பொட்டாஷ் (வெடியுப்பு) தன்மை, பொட்டாஷ்களின் வினைத்திறன் மூலம் உறுதியானதாக விளைச்சல் மற்றும் அதன் இயல்பு நிலையினை கற்பதற்கு நடாத்தப்பட்ட சர்வதேச சம்மேளனத்தின் அறிக்கைசார் குறியீடுகள். ஏற்பாடு, சர்வதேச பொட்டாஷ் நிறுவனம் (சுவிற்சர்லாந்து), ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை விவசாய திணைக்களம், கண்டி, இலங்கை.

vii. வீரசிங்க, எச். ஏ. எஸ், கீர்திபால, ஏ. பீ. மற்றும் சிவனந்தவேல், ரி. (2011), இலங்கையில் ஹிங்குராணை கரும்பு விவசாயம் செய்கின்ற பிரதேசங்களில் பயிர்ச் செய்கைகள் மாற்றம் அடைவதால் மண்ணின் இரசாயன உறுப்பமைப்பு பற்றிய விசேட கற்றல். கிழக்கு மற்றும் தென் கிழக்கு ஆசிய நாடுகளில் மண் விஞ்ஞானம் பற்றிய அமைப்புகளின் ஒன்றியத்தின் பத்தாவது சர்வதேச சம்மேளன அறிக்கைக் குறியீடு. கொழும்பு, இலங்கை.

viii. விஜயவர்தன எல். எம். ஜே. ஆர்., அபேரத்ன கே. எச். டி. , விதாரம டபிள்யூ. ஆர். ஜீ. மற்றும் கீர்திபால ஏ. பீ. (2011), இலங்கையில் செவனகல மழைப் பொழிவுடன் கூடிய கரும்புச் செய்கையின் போது மேலதிக நீர் வினியோகத்திற்காக, வெளிப்புற அனர்தத்தால் வீணாகப் போகும் நீரை சேகரித்துக் கொள்ளல் மற்றும் விவசாய கிணறுகள் பயன்படுத்தல் : பூர்வாங்க பரிசோதனை. 16 வது சர்வதேச காடுகள் மற்றும் சுற்றாடல் தொடர்பான சம்மேளனம். ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், இலங்கை.

## கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு அறிக்கை

தலைவர்,
கரும்பு ஆராய்ச்சி நிறுவனம்,
உடவளவை.

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு அறிக்கை - 2011**

2011 ஆம் ஆண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் சென்ற வருடத்திற்கு ஒப்பாக பார்க்கின்ற போது (03) இவ் வருடத்தினுள் 05 குழுக் கூட்டங்களை நடாத்திட இயலுமாகியது.
இவ் ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு உறுப்பினர்களின் அர்ப்பணிப்பால் அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள சட்ட திட்டங்கள் மற்றும் சுற்றுநிருபங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு நிறுவனத்தில் காணப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதற்கு இயலுமாகியதும் நிறுவனத்தின் அலுவல்களை மேற்கொண்டுப் போகும் போது ஏற்படக்கூடிய பலதரப்பட்ட நிர்வாக ரீதியிலான சிக்கல்களுக்கு தீர்வு தேடும் போது வெளிவாரி நிறுவனங்களால் நிறைவேற்றிக் கொள்ள வேண்டிய காரணங்கள் தொடர்பாக குழுசார் அங்கத்தவர்களின் தலையிடலால் தேவையான ஒத்துழைப்பை பெற்றுக் கொடுப்பதற்கு கணக்காய்வு மற்றும் முகாதைத்துவ குழுவுக்கு முடிந்துள்ளது.

தீர்மானங்களை எடுப்பதற்காக ஆளுகை சபையிடம் முன் வைக்க வேண்டிய காரணங்கள் அதற்கு முன்னர் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவால் களந்துரையாடி சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடியாக விதந்துரைப்பதன் மூலம் ஆளுகை சபைக்கு தீர்மானங்களை எடுப்பதை இலகு படுத்திட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் ஒத்துழைப்பை குறையின்றி வழங்கப்பட்டுள்ளன.

நிறுவனத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள நிர்வாக அமைப்புகளில் காணப்படும் பெலயீனங்கள், தவறுகள் மற்றும் குறைப்பாடுகளால் ஏற்படக்கூடிய அனர்த்தங்களை கூடியளவில் குறைத்தக் கொள்வதற்கும் அதன் மூலம் வெளிவாரி கணக்காய்வாளர்களால் ஏற்படக்கூடிய கணக்காய்வு விசாரணைகளை குறைத்துக்கொள்வதற்கும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் நடவடிக்கைகள் காரணமாகி உள்ளது.

அவ்வாறாக நிறுவனத்தின் செயற்பாடுகளை வெற்றிகரமான முறையில் மேற்கொண்டுப் போவதற்கு 2011 ஆம் அண்டின் போது கரும்பு ஆராய்ச்சி நிறுவனம் சார் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு செயற்பட்டுள்ளது.

உள்ளக கணக்காய்வாளர்
கரும்பு ஆராய்ச்சி நிறுவனம்
2012 அக்தோபர் 16 ஆம் திகதி.

## கணக்காய்வு செய்யப்பட்ட நிதிசார் அறிக்கைகள் கரும்பு ஆராய்ச்சி நிலையம்
## 31.12.2010 க்கு உள்ளவாறான நிதி நிலை அறிக்கை

| சொத்துகள் | குறிப்பு | 2011 ரூபா. | 2011 ரூபா. | 2010 ரூபா. | 2010 ரூபா. |
|---|---|---|---|---|---|
| **நடைமுறைச் சொத்துகள் அல்லாதவை தேறிய பெறுமதி** | | | | | |
| காணி, இயந்திரங்களும் உபகரணங்களும் | 1 | 71,690,896.00 | | 88,755,317.00 | |
| முதலீடுகள் (நெ/கு) | 2 | 30,020,313.00 | 101,711,209.00 | 29,500,113.00 | 118,255,430.00 |
| **நடைமுறைச் சொத்துகள்** | | | | | |
| நுகர்வக்கூடிய தொகை | 3 | 4,510,833.00 | | 5,352,815.00 | |
| நடைமுறையிலுள்ள செயற்பாடுகள் | | 100,000.00 | | 717,521.00 | |
| வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்கக் கூடிய வருவாய்கள் (குறுங் கால) | 4 | 38,844,369.00 | | 46,915,647.00 | |
| முதலீடுகள் (குறுங் கால) | 5 | 114,418,248.00 | | 197,434,957.00 | |
| முன்கட்டணங்களும் ஏனைய வைப்புக்களும் | 6 | 655,514.00 | | 842,381.00 | |
| காசு மற்றும் காசுக்கு சமனானவை | 7 | 68,749,990.00 | 227,278,954.00 | 16,901,137.00 | 268,164,458.00 |
| **மொத்த சொத்துக்ள்** | | | 328,990,163.00 | | 386,419,888.00 |
| **பொறுப்புகள்** | | | | | |
| **நடைமுறை பொறுப்புகள்** | | | | | |
| செலுத்தப்பட வேண்டிய செலவுகள் | 8 | 4,017,803.00 | | 5,212,598.00 | |
| சேர்ந்து திரண்ட செலவீனங்கள் | 9 | 6,712,852.00 | 10,730,655.00 | 6,017,526.00 | 11,230,124.00 |
| **நடைமுறை அல்லாத பொறுப்புகள்** | | | | | |
| தவணை முறையிலான வருமானம் | | | | 7,853,601.00 | |
| பணிக்கொடை கொடுப்பனவுகள் தொடர்பான ஒதுக்கீடுகள் | 10 | 33,789,530.00 | 33,789,530.00 | 30,020,313.00 | 37,873,914.00 |
| **மொத்த பொறுப்புகள்** | | | 44,520,185.00 | | 49,104,038.00 |
| **மொத்த தேறிய சொத்துகள்** | | | 284,469,978.00 | | 337,315,850.00 |
| **தேறிய சொத்துகள் / சமனான** | | | | | |
| திரண்ட நிதியம் | 11 | 145,285,139.00 | | 145,285,139.00 | |
| சேமிப்பு நிதிகள் | 12 | 118,244,839.00 | 263,529,978.00 | 164,110,711.00 | 309,395,850.00 |
| **மறு மதிப்பீடு** | | 20,940,000.00 | 20,940,000.00 | | 27,920,000.00 |
| **மொத்த சொத்துகள் / சமனான** | | | 284,469,978.00 | | 337,315,850.00 |

| | | |
|---|---|---|
